DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 111/2019

List of Witness : Lw2

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | நாராயணசாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பழனியப்ப கவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 03/07/2026

(எதிரிகள் ஆஜர் இல்லை. 8வது எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் வளையப்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பவம் நடந்து 10 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் தற்போது எனக்கு ஞாபகம்இல்லை. சம்பவத்தை குறித்து தற்போது என்னால் நினைவு கூற முடியவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 04.02.2014 ஆம் தேதி மாலை சுமார் 3.30 மணியளவில் நான் எனது உறவினர் கருப்புராஜ் மகன் மகேந்திரனை பார்க்க அவரது தோட்டத்துச்சாலை வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது அப்பா கருப்புராஜ், அம்மா விசாலாட்சி, மைத்துனர் செல்லமுத்து தங்கை கவிதா, செல்லமுத்து தங்கை பாப்பாத்தி, செல்லமுத்து அப்பா, அம்மா இருவரும் செல்லமுத்து நண்பர் கள்ளிமந்தையம் பத்திர எழுத்தர் சுப்பிரமணி மற்றும் சிலர் கையில் கம்பி, கட்டைகளை வைத்துக் கொண்டு அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்து மகேந்திரனை வெளியே இழுத்து போட்டு கையால் காலால்

உதைத்தும், அடித்தும், ஊமைக்காயம் ஏற்படுத்தி டேய் மகேந்திரா கேஸை வாபஸ் வாங்கு, நீ கேஸ் போட்டால் நாங்கள் பயந்துவிடுவோமா என்றும், அசிங்கமான கெட்டவார்த்தைகளால் பேசி மேலும், கேஸை வாபஸ் வாங்காவிட்டால் உன்னை கொன்று தென்னை மரத்திற்கு உரமாக போட்டுவிடுவேன் என்றும், கையில் உள்ள ஆயுதத்தை காட்டி கொலை மிரட்டல் விடுத்துவிட்டு சென்று விட்டனர் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.03 17:29:13 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 03/07/2026